தேதி : **17.4.2014**

**<u>தலைமைக் கழகச் செய்தி</u>**

**நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தல் - 2014**

**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்**
**மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர்**
**புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணம்**
**கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி நாடாளுமன்றத் தொகுதிகள்**
**25-ஆம் நாள் : 17.4.2014 – வியாழக் கிழமை**

வருகின்ற **24.4.2014** அன்று நடைபெற உள்ள நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தலை முன்னிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் இன்று **(17.4.2014** – வியாழக் கிழமை**)**, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி நாடாளுமன்றத் தொகுதிகளில் நடைபெறும் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக, சென்னையில் இருந்து வான் வழியாகப் புறப்பட்டு பிரச்சாரப் பயணத்தின் முதல் இடமான கிருஷ்ணகிரி சென்றடைந்த போது, அங்கு கிருஷ்ணகிரி மாவட்டக் கழகத்தின் சார்பில் வரவேற்பும், திருக்கோயில்களின் சார்பில் பூரண கும்ப மரியாதையும் அளிக்கப்பட்டது.

கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், பொதுக்கூட்டம் நடைபெறும் இடமான **‘பூசாரிப்பட்டி கூட்டு ரோடு, வரட்டனம்பள்ளி மெயின் ரோடு, கிருஷ்ணகிரி ஒன்றியம்’** என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரச்சாரப் பொதுக்கூட்ட மேடையைச் சென்றடைந்து, அங்கே லட்சக்கணக்கில் திரண்டிருந்த மக்களிடையே, மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசின் பல்வேறு அவலங்களையும்; திமுக மத்திய அரசில் தனக்கு இருந்த செல்வாக்கை பயன்படுத்தி தமிழ் நாட்டிற்கு செய்திட்ட பல்வேறு துரோகங்களையும்; ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக கழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும், திமுக–வின் சுயநலவாத செயல்களையும் பட்டியலிட்டு; பாரதீய ஜனதா கட்சியின் வேட்பாளர் திரு. நரேந்திரமோடி முதலமைச்சராக இருக்கும் குஜராத் மாநிலத்தையும், தமிழ் நாட்டையும் ஒப்பீடு செய்து, அனைத்து நிலைகளிலும் தமிழகம் முன்னணி வகிப்பதை நயம்பட வாக்காளப் பெருமக்களுக்கு எடுத்துக் கூறியதோடு; கழக அரசால் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும், கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதிக்கு செய்துள்ள மக்கள் நலப் பணிகளையும் நேர்த்தியாக எடுத்துரைத்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கண்ட வெற்றிச் சின்னமாம் ‘இரட்டை இலை’ சின்னத்தில் வாக்களித்து, கழக வேட்பாளர்களை மகத்தான வெற்றி பெறச் செய்ய வைக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொண்டார்கள்.

கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் உரையைக் கேட்ட மக்கள், எங்கள் வாக்கு இரட்டை இலை சின்னத்திற்கே என மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

பின்னர், கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் முன்னிலையில், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்களைக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர்.

தொடர்ந்து, கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், கிருஷ்ணகிரியில் இருந்து வான் வழியாகப் புறப்பட்டு தருமபுரி சென்றடைந்த போது, அங்கு தருமபுரி, சேலம் புறநகர் ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் வரவேற்பும், திருக்கோயில்களின் சார்பில் பூரண கும்ப மரியாதையும் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், '**தருமபுரி பென்னாகரம் சாலை, மேம்பாலம் அருகில்**' என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி பொதுக்கூட்ட மேடையை வந்தடைந்து, அங்கே லட்சக்கணக்கில் திரண்டிருந்த மக்களிடையே பிரச்சாரம் செய்யும் போது,

"தருமபுரி நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்டக் கழகச் செயலாளர்களே, தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்களே, கழக நிர்வாகிகளே, தலைமைக் கழக நிர்வாகிகளே, கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. செந்தில்பாலாஜி அவர்களே, கழக தலைமை நிலையச் செயலாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. பழனியப்பன் அவர்களே, சேலம் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான அன்புச் சகோதரர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளே, தமிழ் நாடு கொங்கு இளைஞர் பேரவையின் நிறுவன அமைப்பாளரும், பரமத்தி வேலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான திரு. தனியரசு அவர்களே, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவனத் தலைவர் திரு. வேல்முருகன் அவர்களே, கொங்குநாடு முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. பெஸ்ட் ராமசாமி அவர்களே, படையாட்சியார் பேரவையின் நிறுவனத் தலைவர் திரு. ராமதாஸ் அவர்களே, இந்திய குடியரசுக் கட்சியின், R.S. கவாய் அமைப்பின் மாநிலத் தலைவர் திரு. கரியமால் அவர்களே, தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. சின்னசாமி அவர்களே, தேசிய மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் திரு. இனமுரசு கோபால் அவர்களே, இந்திய குடியரசு கட்சி, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி, அகில இந்திய மூவேந்தர் முன்னணிக் கழகம், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம், இந்திய தேசிய லீக், இந்தியன் யூனியன் காயிதே மில்லத் லீக், அகில இந்திய தேசிய லீக், இந்திய தேசிய முஸ்லிம் லீக், தமிழ் மாநில முஸ்லீம் லீக், உள்ளிட்ட தோழமைக் கட்சிகளின் தலைவர்களே, தொண்டர்களே, பொதுமக்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் MGR–ன் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமைக் கழக உடன்பிறப்புகளே, எனதருமை வாக்காளப் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடைபெற உள்ள மக்களவை தேர்தல் வெறும் ஆட்சி மாற்றத்திற்காக நடைபெறுகின்ற சாதாரண தேர்தல் அல்ல. இந்திய மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருகின்ற தேர்தல். அண்டை நாடுகளின் அச்சுறுத்தல்களில் இருந்து இந்தியாவை காக்கும் தேர்தல், பொருளாதார சீரழிவிலிருந்து இந்தியாவை மீட்கும் தேர்தல், ஊழல் சாம்ராஜ்யத்தில் இருந்து இந்திய மக்களை விடுவிக்கின்ற தேர்தல், உங்கள் துன்பங்களை போக்குகின்ற தேர்தல், உங்களை துயரங்களிலில் இருந்து விடுவிக்கின்ற தேர்தல்.

காங்கிரஸ் தலைமையிலான மத்திய கூட்டணி ஆட்சியில் என்னென்ன பிரச்சனைகளுக்கு நீங்கள் ஆளாக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை சொல்லி மாளாது. விலைவாசி உயர்வு, பண வீக்கம், மாதா மாதம் பெட்ரோல், டீசல் விலை உயர்வு, வேலை வாய்ப்பின்மை, தொழில் வளர்ச்சியின்மை, வேளாண் உற்பத்தியில் மந்த நிலை என மத்திய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட பிரச்சனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இது போன்ற மோசமான அரசை நாம் பார்த்ததே இல்லை என்று சொல்லும் அளவுக்கு மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சி நடத்தியது.

இப்படி, எல்லா விதத்திலும் சாமானிய மக்களுக்கு எதிரான மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசில் சில மாதங்களுக்கு முன்பு வரை அங்கம் வகித்து ஒட்டி உறவாடிய கட்சி தி.மு.க. என்பதை மறந்துவிடாதீர்கள். தமிழ் நாட்டிற்கே தலைகுனிவை ஏற்படுத்தும் வகையில், 2 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழலை முன்னின்று நடத்திய கட்சி தி.மு.க. இப்படி, காங்கிரசும், தி.மு.க–வும் சேர்ந்து சாமானிய, ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்கு எதிராக செயல்பட்டதன் காரணமாக இந்திய நாட்டின் பொருளாதாரமே ஸ்தம்பித்துவிட்டது.

இப்படிப்பட்ட கொடுங்கோல் அரசிடமிருந்து இந்திய நாட்டை காப்பாற்றுவதற்கான தருணம் வந்துவிட்டது. தமிழ் நாட்டிற்கு தேவையானவற்றை மத்திய அரசிடம் கேட்டுப் பெறுகின்ற காலம் கனிந்துவிட்டது. இந்த வாய்ப்பின் மூலம் உங்கள் வாக்குரிமையை நீங்கள் தமிழக நலனுக்காக செயல்படும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு செலுத்த வேண்டும் என்று சொல்லுவதற்காகவே இன்று உங்களை நேரில் சந்திக்க நான் இங்கே வந்திருக்கிறேன்.

2011–ஆம் ஆண்டு நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த அளவுக்கு நீங்கள் வெற்றியை தந்தீர்களோ, அதைவிட மகத்தான வெற்றியை இந்த நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளினை உங்கள் முன் வைப்பதற்காகவே நான் இங்கே வந்திருக்கிறேன். எனது வேண்டுகோளினை நீங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக உண்டு. செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

தமிழகத்திலே மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்த அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. கடந்த 34 மாத கால ஆட்சியில் மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையையும் மீறி, திமுக–வின் சதித் திட்டங்களையும் மீறி, தமிழக மக்களுக்கு என்னென்ன நலத் திட்டங்களை, வளர்ச்சித் திட்டங்களை, தொலைநோக்குத் திட்டங்களை என்னால் தர முடியுமோ, அவற்றையெல்லாம் அளித்திருக்கிறேன்; அளித்துக் கொண்டும் வருகிறேன்.

தருமபுரி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு வசதிகளை கடந்த 34 மாதங்களில் நாங்கள் நிறைவேற்றி கொடுத்து இருக்கிறோம். தருமபுரி தொகுதிக்குட்பட்ட மேட்டூர் நகராட்சியில் 73 கோடியே 9 லட்சம் ரூபாய் செலவில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற உத்தரவிடப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு உள்ளன. தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய பால் பண்ணையில் உள்ள குளிர்விப்புத் திறன் வசதி, குளிரூட்டப்பட்ட பாலைச் சேமிக்கும் கொள் கலன் வசதி, பாலை திடப்படுத்தும் வசதி உட்பட பல்வேறு வசதிகள் 3 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டு உள்ளன.

தருமபுரி மாவட்டம், ராமகொண்ட ஹள்ளி கிராமம் வழியாக செல்லும் மத்தனப் பள்ளம் ஆற்றின் குறுக்கே 14 கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் புதிய ஏரி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் நவீன வசதியுடன் கூடிய சேமிப்பு கிடங்கு கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம், செட்டிக்கரையில் அரசு பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரிக்கு தேவையான கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் 89 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று

வருகின்றன. விலங்குகள் மக்கள் வாழ்விடங்களுக்குள் நுழைவதை தடுக்கும் வகையில், கிருஷ்ணகிரி தொகுதிக்கு உட்பட்ட ஒசூர் மற்றும் தருமபுரி பகுதிகளில் யானை தடுப்பு அகழிகள் அமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், தண்ணீர் வசதியை பெருக்குதல் உட்பட பல்வேறு பணிகள் 12 கோடியே 23 லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன. தருமபுரி மாவட்டத்தில் நாட்டு கோழி வளர்ப்பினை ஊக்கப்படுத்த 94 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் 8 கோடியே 67 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில், 5 மேம்பாலங்கள் கட்டும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒரு பாலம் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. மூன்று பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள ஒரு பால கட்டடப் பணி தொடங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிவாடி–தருமபுரி ரயில் நிலையங்களுக்கு இடையில் ஒரு சாலை மேம்பாலம், வெண்ணம் பட்டியில் ஒரு சாலை மேம்பாலம், தருமபுரி–பாலக்கோடு ரயில் நிலையங்களுக்கு இடையில், ஒகேனக்கல்–பென்னாகரம்–தருமபுரி–திருப்பத்தூர் சாலையில் ஒரு மேம்பாலம், தருமபுரி–பாப்பாரப்பட்டி சாலையில் ஒரு சாலை மேம்பாலம் என 4 சாலை மேம்பாலங்கள் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

மேட்டூர் நகராட்சிப் பகுதிகளில் வசிக்கும் 74,000 மக்கள் பயன்பெறும் வகையில் 12 கோடியே 47 லட்சம் ரூபாய் செலவில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை அடுத்த மாதம் நிறைவு பெறும். இந்த மாவட்டத்தில் உள்ள 324 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 1 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் பயன் பெறும் வகையில், 17 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் தனி மின்விசைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன.

தருமபுரி மக்களவைத் தொகுதியின் வளர்ச்சிக்காக, நலனுக்காக பல்வேறு பணிகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

வாக்காளப் பெருமக்களே! தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் பிரச்சனை குடிநீர்ப் பிரச்சனை. இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மக்கள் பயன்பாட்டிற்காக கடந்த ஆண்டு நான் துவக்கி வைத்தேன். இதன் மூலம் இந்தப் பகுதி மக்களின் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டதோடு, Fluorosis என்னும் நோயிலிருந்து இப்பகுதி மக்கள் காப்பாற்றப்பட்டு இருக்கிறார்கள். பொய்ப் பேசுவதையே வாடிக்கையாக கொண்டுள்ள தி.மு.க–வினர், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தீட்டியதே தி.மு.க. என்பது போலவும், எனது தலைமையிலான அரசு இந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டது என்றும், இதுவரை எந்தப் பகுதிக்கும் தண்ணீர் செல்லவில்லை என்றும், பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். திரு. ஸ்டாலினும் இந்தத் திட்டம் குறித்து இந்தப் பகுதியில் பொய்ப் பிரச்சாரம் செய்துள்ளார். ஒரு திட்டம் குறித்து கருத்து தெரிவிப்பதற்கு முன்பு அதனை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் நீண்ட நாள் கனவு ஆகும். 1965–ஆம் ஆண்டு முதன் முதலில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. அதன் பிறகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, 1986–ஆம் ஆண்டு 120 கோடி ரூபாய் செலவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

1987–ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவினை அடுத்து இந்தத் திட்டத்தில் தொய்வு ஏற்பட்டது. பின்னர், 1994–ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த போது, சுமார் 350 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்தேன். ஆனால், அப்போது மத்திய அரசு இதற்கு அனுமதி பெற்றுத் தருவதில் தாமதம் செய்ததால், நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. 1996–ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

1998–ல் மத்திய நீர்வளத் துறை அமைச்சக செயலாளர் முன்பு நடைபெற்றக் கூட்டத்தில், கர்நாடக அரசால் ஒகேனக்கல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் பின்னர் மீண்டும் நான் முதலமைச்சரான போது 2003–ல் இந்தத் திட்டத்தை

எடுத்துக் கொண்டேன். 18.8.2005 அன்று எனது ஆட்சிக் காலத்தில் மூன்று நகராட்சிகள், 17 பேரூராட்சிகள், 18 ஒன்றியங்களில் உள்ள 6,755 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு பயன் அளிக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 1,005 கோடி ரூபாய் மதிப்பில் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதி உதவியுடன் நிறைவேற்றுவதற்கான கருத்துருவை மத்திய அரசுக்கு நான் அனுப்பினேன்.

இதன் அடிப்படையில் நிதி உதவி பெறப்பட்டு, 26.2.2008 அன்று ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. இதனை எதிர்த்து 16.3.2008 அன்று கர்நாடக முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பா ஒகேனக்கல்லில் போராட்டம் நடத்தினார். இதனை எதிர்த்து அப்போது முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி குரல் கொடுக்கவில்லை. வாய்மூடி மவுனியாக இருந்தார் திரு. கருணாநிதி.

திரு. கருணாநிதி இது குறித்து வாய் திறக்காததால், ஒகேனக்கல்லில் எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 27.3.2008 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று நான் 26.3.2008 அன்று அறிக்கை வெளியிட்டேன். 27.3.2008 அன்று ஒகேனக்கல்லில் எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் பிரம்மாண்டமான அளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

நான் ஆர்ப்பாட்டம் என்று அறிவித்தவுடன், தூங்கிக் கொண்டிருந்த முந்தைய மைனாரிட்டி திமுக அரசு திடீர் என்று விழித்துக் கொண்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்திய அதே நாளில் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் ஒரு தீர்மானம் சட்டப் பேரவையில் கொண்டு வரப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் நிச்சயமாக என்ன வந்தாலும் சரி, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று கூறினார்கள். இதற்கு மத்திய அரசு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அனைத்துக் கட்சிகளும் இதற்கு ஆதரவு அளித்து ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1.4.2008 அன்று மீண்டும் ஒரு தீர்மானம் அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதியால் கொண்டு வரப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் ஏற்கெனவே கொண்டு வந்த தீர்மானத்துடன் சில வாசகங்கள் சேர்க்கப்பட்டன. அதில், ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும், மத்திய அரசு இதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்தத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இப்படியெல்லாம் பேசிவிட்டு, அதன் பின்னர் திடீரென்று 5.4.2008 அன்று யாரையும் கலந்து ஆலோசிக்காமல், யாருக்கும் தெரிவிக்காமல், சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், சட்டப் பேரவைக்கு தெரிவிக்காமல், "கர்நாடகத்தில் தேர்தல் முடியட்டும், பின்னர் நாம் கலந்து பேசி, தேவைப்பட்டால் களம் காண்போம்" என்று கூறி அந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்தார் திரு. கருணாநிதி. மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்து கொண்டு இது போன்று ஏன் பேசினார் திரு. கருணாநிதி ? எல்லாமே தன்னலம் தான்; சுயநலம் தான்.

கர்நாடகாவிலே திரு. கருணாநிதி குடும்பத்தினர் வியாபாரம் செய்கின்றனர். தொலைக்காட்சி சேனல்களை வைத்து இருக்கின்றனர். பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் அங்கே அவர்களுக்கு இருக்கின்றன. எனவே, கர்நாடகாவிற்கு எதிராக கருத்து தெரிவித்தால், குடும்ப வியாபாரம் பாதிக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சி, ஒகேனக்கல் திட்டம் நிறுத்தி வைக்கப்படும் என்று கூறினார் திரு. கருணாநிதி.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தை நிறுத்தி வைத்ததற்கு நான் கடும் கண்டனம் தெரிவித்ததோடு, 8.4.2008 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நான் சென்று இது குறித்து விவாதிக்க வேண்டும் என்ற வேண்டுகோளினை நான் வைத்தேன். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது. பின்னர், சட்டமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்த நான் திரு. கருணாநிதியின் செயலைக் கண்டித்து பேட்டி அளித்தேன்.

அந்தப் பேட்டியிலே, கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலுக்கும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் என்ன சம்பந்தம்? என்று வினவியதோடு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கர்நாடக அரசின் அனுமதியோ, தயவோ, நமக்குத் தேவையில்லை என்று எடுத்துரைத்தேன். இது தவிர, 1998–ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், பெங்களூர் குடிநீர்த் திட்டத்திற்கு தமிழக அரசு சம்மதித்தால், கர்நாடக அரசு ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற சம்மதிக்கும் என்ற நிபந்தனை போடப்பட்டு, அதற்கான ஒப்பந்தத்தில் இரு மாநில அரசுகளும் கையெழுத்திட்டுள்ளன என்பதையும் நான் சுட்டிக் காட்டினேன்.

எனது தொடர் வற்புறுத்தல் காரணமாக இந்தத் திட்டம் துவக்கப்பட்டு, அதற்கான பணிகள் மந்த கதியில் தான் நடந்தன. எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், ஒப்பந்தம் வழங்கும் வரை தான் தி.மு.க. அந்தத் திட்டத்தில் ஆர்வம் செலுத்தும். ஒப்பந்தம் வழங்கப்பட்டவுடன் கமிஷன் தொகையும் கைமாறி விடும். அதன் பிறகு தி.மு.க. அந்தப் பணியில் ஆர்வம் செலுத்தாது. இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலும் அதே நடைமுறை தான் கடைபிடிக்கப்பட்டது.

2011–ஆம் ஆண்டு மே மாதம் தி.மு.க. ஆட்சியை விட்டுச் செல்லும் போது, 50 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், வெறும் 18 விழுக்காடு பணிகளே முடிக்கப்பட்டு இருந்தன. மீதம் இருந்த பணிகள் எனது ஆட்சிக் காலத்தில் இரண்டே ஆண்டுகளில் முடிக்கப்பட்டு, இதனை நான் துவக்கி வைத்தேன். ஆனால், திரு. ஸ்டாலினோ 2012–ஆம் ஆண்டிற்குள்ளேயே இந்தத் திட்டம் முடிக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்திற்குள்ளாக 50 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டிருந்தால், இந்தத் திட்டம் 2012–ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்பட்டு இருக்கும். ஆனால், திமுக ஆட்சிக் காலத்தில் வெறும் 18 விழுக்காடு பணிகள் தான் முடிக்கப்பட்டன. இந்தத் திட்டத்திற்காக கட்டப்பட வேண்டிய 1,594 மேல்நிலை மற்றும் கீழ்நிலை தொட்டிகளில், 12 தொட்டிகள் மட்டுமே முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டன. மொத்தமுள்ள 9,936 கிலோ மீட்டர் நீளமுள்ள குழாய் இணைப்பு பணிகளில், திமுக ஆட்சிக் காலத்தில் வெறும் 156 கிலோ மீட்டர் பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டு இருந்தன.

இப்படி இருக்கும் போது மீதமுள்ள பணிகளை நாங்கள் எப்படி ஓராண்டிற்குள் முடிக்க முடியும்? இருப்பினும் போர்க்கால அடிப்படையில் பணிகள் முடிக்கப்பட்டு, 1,982 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம், 2013–ஆம் ஆண்டு மே மாதம் என்னால் துவக்கி வைக்கப்பட்டது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எடுக்கப்பட்ட துரித நடவடிக்கை காரணமாக, இங்கே உங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இது மட்டுமல்லாமல், 115 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் காவேரி நீரை ஆதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் மூலம் 1 கோடியே 71 லட்சம் மக்கள் பயன் பெறும் வகையில், நாள் ஒன்றுக்கு 850 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது. காவேரி நதிநீரில் நமக்குள்ள பங்கினை கர்நாடகம் திறந்துவிட்டால் தான் இந்தக் குடிநீர்த் திட்டங்கள் எவ்வித பாதிப்புமின்றி செயல்படும்.

இந்தக் காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் காங்கிரஸ் கட்சி தலைமையிலான மத்திய ஆட்சியாக இருந்தாலும், BJP தலைமையிலான மத்திய ஆட்சியாக இருந்தாலும், தமிழ்நாட்டிற்கு துரோகம் இழைப்பதையே வாடிக்கையாக கொண்டுள்ளன.

வாக்காளப் பெருமக்களே! காவேரி நதிநீர்ப் பிரச்சனையில் தமிழகத்திற்கு தொடர்ந்து துரோகம் இழைத்து வரும் காங்கிரஸ், தி.மு.க., BJP மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளை வரும் மக்களவை தேர்தலில் நீங்கள் படுதோல்வி அடையச் செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா? நீங்கள் செய்வீர்களா? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

வாக்காளப் பெருமக்களே! அண்மையில், சென்னை மீனம்பாக்கத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளரும் குஜராத் முதலமைச்சருமான திரு. நரேந்திர மோடி அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, தி.மு.க–வுடன் இணைத்து, இவர்கள் மக்களைப் பற்றி சிந்திக்கவும் இல்லை, அக்கறை செலுத்தவும் இல்லை என்று குற்றம் சாட்டியுள்ளார். இந்தியாவிலேயே சதா சர்வகாலமும் மக்களைப் பற்றியே நினைக்கின்ற ஒரே மக்கள் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான். அதனால் தான், குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறோம். ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 25,000 ரூபாய் நிதி உதவியுடன் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம். பட்டம் மற்றும் பட்டயம் படித்தப் பெண்களாக இருந்தால், அவர்களுக்கு தாலிக்கு தங்கம் வழங்குவதுடன் 50,000 ரூபாய் நிதி உதவியாக வழங்கப்படுகிறது. ஒன்று முதல் 12 ஆம் வகுப்பு வரை கட்டணமில்லா கல்வி வழங்கப்படுகிறது. இது தவிர, விலை ஏதுமின்றி பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள், காலணிகள், புத்தகப் பைகள், உபகரணப் பெட்டிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. மேல்நிலை வகுப்பு மாணவ, மாணவியருக்கு விலையில்லா சைக்கிள்கள், மடிக்கணினி மற்றும் ஊக்கத் தொகை ஆகியவை வழங்கப்படுகின்றன. குடும்ப அட்டைதாரர்களுக்கு மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி ஆகியவை விலை ஏதுமின்றி வழங்கப்படுகின்றன. வெண்மைப் புரட்சியை உருவாக்கும் வகையில் விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத் தொகை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது போன்று உழவர் பாதுகாப்புத் திட்டம், விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என எண்ணற்ற திட்டங்கள் எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநகராட்சிகளில் ஏழை, எளிய மக்கள் பசியாற மிகக் குறைந்த விலையில் உணவு வழங்கப்படும் "அம்மா உணவகங்கள்" ஏற்படுத்தப்பட்டு உள்ளன. காய்கறிகள் விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் துவக்கப்பட்டு உள்ளன. வெளிச் சந்தையில் கிலோ அரிசி 20 ரூபாய்க்கு விற்பனை செய்யும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறோம். இவை எல்லாம் ஏழை மக்களை மனதில் வைத்து செயல்படுத்தப்படும் திட்டங்கள் இல்லாமல் வேறு என்ன? மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு விளங்குகிறது.

வாக்காளப் பெருமக்களே! ஓர் அரசு மக்கள் நலனில் அக்கறை உள்ள அரசா என்பதை கணிக்க உதவுவது பல்வேறு மனித வளக் குறியீடுகள். இதன் அடிப்படையில் குஜராத்தை விட தமிழ்நாடு தான் முன்னணியில் உள்ளது.

மொத்த மக்கள் தொகையில் 16.6 விழுக்காடு மக்கள் குஜராத்திலே வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளார்கள். ஆனால், தமிழ்நாட்டில் 11.3 விழுக்காடு மக்கள் மட்டுமே வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர். குழந்தை இறப்பு விகிதத்தில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது. ஆனால், குஜராத் மாநிலம் 11–ஆவது இடத்தில் இருக்கிறது. இன்னும் சற்று விளக்கமாக சொல்ல வேண்டுமென்றால், தமிழ் நாட்டில் உயிருடன் பிறக்கும் 1,000 குழந்தைகளில் 21 குழந்தைகள் மட்டுமே ஒரு வயது அடைவதற்குள் இறக்கின்றன. ஆனால், குஜராத்தில் 1,000 குழந்தைகளுக்கு 38 குழந்தைகள் இறக்கின்றன. தமிழ்நாட்டில் தாய் இறப்பு விகிதம் 90 என்ற அளவில் இருக்கிறது. ஆனால், குஜராத்தில் 122 என்ற அளவில் இருக்கிறது. தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களில் 14.3 விழுக்காடு தொழிலாளர்கள் பட்டதாரிகள்.

ஆனால், குஜராத்தில் 10 விழுக்காடு தொழிலாளர்களே பட்டதாரிகளாக உள்ளனர். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அதிக மக்கள் பயன்பெறும் ஒரே மாநிலம் தமிழ்நாடு. ஆனால், இதற்கு முற்றிலும் நேர்மாறான நிலைமை குஜராத்தில் நிலவுகிறது. மாநிலத்தின் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. ஆனால், குஜராத் ஐந்தாவது இடத்தில் இருக்கிறது.

அந்நிய முதலீட்டை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. 2012–2013 ஆம் ஆண்டில் மட்டும் 15,252 கோடி ரூபாய் அந்நிய முதலீடு தமிழ் நாட்டில் பெறப்பட்டு இருக்கிறது. இதே காலகட்டத்தில் குஜராத்தில் வெறும் 2,676 கோடி ரூபாய் மட்டுமே அந்நிய முதலீடாக பெறப்பட்டு இருக்கிறது. வாக்காளப் பெருமக்களே! சிந்தித்துப் பாருங்கள். 15,252 கோடி ரூபாய் எங்கே? வெறும் 2,676 கோடி ரூபாய் எங்கே? மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகம் நான்காவது இடத்தில் இருக்கிறது. ஆனால் குஜராத் 11–ஆவது இடத்தில் இருக்கிறது.

தமிழ் நாட்டில் உள்ள மொத்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 36,996. ஆனால், குஜராத்தில் வெறும் 22,220 தொழிற்சாலைகள் தான் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 15 லட்சத்து 90 ஆயிரம். ஆனால், குஜராத்தில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை வெறும் 10 லட்சத்து 50 ஆயிரம் தான்.

2011–ஆம் ஆண்டு முதல் 2013 வரை தமிழ்நாட்டில் புதிதாக தொடங்கப்பட்ட சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 732. ஆனால், குஜராத்தில் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 16 தொழில்கள் தான் துவங்கப்பட்டன.

உணவு தானிய உற்பத்தியில் 2011–2012 ஆம் ஆண்டு 101.51 லட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் அளவை எட்டி தமிழகம் சாதனை படைத்துள்ளது. இதற்கான மத்திய அரசின் விருதும் தமிழ்நாட்டிற்கு கிடைத்திருக்கிறது. ஆனால், குஜராத் மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தி வெறும் 88.74 லட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் தான் உள்ளது.

2013–2014 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் உணவு தானிய உற்பத்தி 103 லட்சம் மெட்ரிக் டன் என மதிப்பிடப்பட்டு உள்ளது. இது போன்று பல துறைகளில் குஜராத்தை விட தமிழ் நாடு தான் முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

வாக்காளப் பெருமக்களே! இப்போது நான் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் இந்தியாவிலேயே பலருக்கு வியப்பை அளிப்பவையாக இருக்கும். பலருக்கு இன்று தான் கண்களை திறந்து விட்டதைப் போல தோன்றும். இது தான் உண்மை நிலை. இதுவரை எல்லாவற்றிலுமே இந்தியாவிலேயே குஜராத் தான் முதன்மையான மாநிலம் என்ற ஒரு மாய தோற்றம் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.

ஆனால், அது உண்மை அல்ல. உண்மை நிலை என்னவென்றால் குஜராத் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது. ஆனால், தமிழ் நாடு எனது தலைமையில் வெற்றுப் பேச்சிலும் விளம்பர வெளிச்சத்திலும் கவனம் செலுத்தாமல், மக்களுக்குத் தொண்டு ஆற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தது. சதா சர்வ காலமும் மக்கள் நலன் பற்றியே சிந்தித்து கர்ம சிரத்தையுடன் கடமை ஆற்றியதால் எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ் நாட்டில் இத்தனை சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் மத்திய அரசு அமைய நீங்கள் ஆதரவு தந்தால் இதைவிட அதிகமான சாதனைகளை நாங்கள் நிகழ்த்திக் காட்டுவோம்.

வாக்காளப் பெருமக்களே! மத்திய அரசின் கொள்கைகளை தீர்மானிக்கும் வலிமையை நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்கினால், தமிழகத்திற்கு தேவையானவற்றை பெற்றுத் தருவதோடு, தமிழக பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு காண்போம் என்ற உறுதியை நான் உங்களுக்கு அளிக்கிறேன்.

நேற்று, சேலம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய திரு. நரேந்திர மோடி அவர்கள் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் தான் நதிகள் இணைப்புத் திட்டம் கொண்டு வரப்பட்டது என்றும், இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருந்தால், தமிழகத்தில் குடிநீர்ப் பிரச்சனை மற்றும் மின்சார தட்டுப்பாடு பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டு இருக்கும் என்று தெரிவித்ததோடு, தமிழக நதிகள் இணைப்பிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். திரு. வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் நதிகள் இணைப்புத் திட்டம் பற்றி பேசப்பட்டதே தவிர, அதை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், தாமிரபரணி – கருமேனியாறு – நம்பியாறு நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு இதுவரை எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 100 கோடியே 96 லட்சம் ரூபாய் செலவு செய்துள்ளது. முதல் மற்றும் இரண்டாம் நிலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மூன்று மற்றும் நான்காம் கட்டப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பெண்ணையாறு–பாலாறு இணைப்புக்காக 500 கோடி ரூபாய் மதிப்பில் இரண்டு திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்ட 4,000 கோடி ரூபாய் மதிப்பிலான காவேரி – குண்டாறு இணைப்புத் திட்டத்தை மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு நிராகரித்துவிட்டது.

மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்ட 1,862 கோடி ரூபாய் மதிப்பிலான அத்திக்கடவு–அவினாசி திட்டத்தையும், மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு நிராகரித்துவிட்டது. இந்த நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு தேவைப்படும் 6,500 கோடி ரூபாயை தமிழ்நாட்டிற்கு வழங்குவோம் என்ற உத்தரவாதத்தை BJP அளிக்கத் தயாரா? தமிழ் நாட்டில் உள்ள நதிகளை இணைப்பதற்கு இன்றியமையாதது காவேரியில் அதற்கேற்ற அளவு தண்ணீர் கிடைப்பது தான். அதற்கு மகாநதி–கோதாவரி–காவேரி இணைப்பு அத்தியாவசியம். இந்த மகாநதி–கோதாவரி–காவேரி இணைப்பினை நடைமுறைப்படுத்த பாரதீய ஜனதா கட்சி உத்தரவாதம் அளிக்கத் தயாரா? அதெல்லாம் இருக்கட்டும். காவேரியில் தமிழகத்திற்குரிய நீரை எவ்வித தடையுமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தையாவது BJP அளிக்கத் தயாரா? என்பதை அந்தக் கட்சி தெளிவுபடுத்த வேண்டும்.

நதிகள் இணைக்கப்படாத சூழ்நிலையிலும், காவேரியில் நமக்குரிய பங்கு கிடைக்கப்படாத சூழ்நிலையிலும், பல்வேறு குடிநீர்த் திட்டங்களை எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றி வருகிறது. எனவே தான், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் தற்போது 3 கோடியே 22 லட்சம் பேருக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஒரு நாளைக்கு 1,759 மில்லியன் லிட்டர் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்தை அதிகரிக்கும் வகையில் கூடுதலாக 2,880 கோடி ரூபாய் கடந்த 34 மாதங்களில் எனது ஆட்சியில் செலவழிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, கடையநல்லூர் மற்றும் சேலம் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சோதனை முறையில் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் 19 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பாட்டுக்கு வர இருக்கின்றன. மேலும், 16 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் அடுத்த ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வர இருக்கின்றன. திருநெல்வேலி மாநகராட்சிக்கான கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் கடந்த மூன்று ஆண்டுகளில் 243 கோடி ரூபாய் செலவில் 5,895 பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் காரணமாக தற்போது 589 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. 9,903 ஊரகக் குடியிருப்புகளில் தனி மின் விசை திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. கடந்த 34 மாதங்களில் ஊரகப் பகுதிகளில் 1,601 கோடி ரூபாய் செலவில் பல்வேறு குடிநீர்ப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

மத்திய அரசின் கொள்கைகளை வகுக்கும் வகையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நீங்கள் வெற்றி பெறச் செய்தால், எங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நதிகள் இணைப்புத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு எல்லாமே நீங்கள் தான். உங்களால் தான் நான், உங்களுக்காகவே நான். எனக்கு தன்னலம் கிடையாது. எல்லாமே உங்கள் நலன் தான். தமிழ் நாட்டின் நலன் தான்; தமிழக மக்களின் நலன் தான். தமிழக மக்கள் தான் என் மக்கள். எனவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் மத்திய ஆட்சி அமைய நீங்களெல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அனைத்து தொகுதிகளிலும் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அன்புடன் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

வருகின்ற மக்களவைத் தேர்தல் வெறும் ஆட்சி மாற்றத்திற்கான தேர்தல் அல்ல. இந்தியாவின் தலையெழுத்தை, உங்களின் தலைவிதியை மாற்றி அமைக்கப் போகிற தேர்தல். மத்திய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் அனைத்துத் துறைகளிலும் ஊழல் கொடிகட்டி பறக்கிறது. 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழல், ஹெலிகாப்டர் ஊழல், நிலக்கரி ஊழல், காமன்வெல்த் விளையாட்டை நடத்தியதில் ஊழல், விமான என்ஜின் வாங்கியதில் ஊழல் என ஊழல் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இதில், 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழலை முன்னின்று நடத்திய கட்சி தி.மு.க. என்பதை மறந்துவிடாதீர்கள். காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்ற ஊழல்கள் மூலம் மட்டும் பல லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட மக்கள் விரோத ஊழல் காங்கிரஸ் அரசை ஆட்சியிலிருந்து தூக்கி எறிவதை குறிக்கோளாக கொண்டு நீங்கள் அனைவரும் உங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அனைத்து தொகுதிகளிலும் காங்கிரஸ் கட்சியை நீங்கள் டெபாசிட் இழக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

கிட்டத்தட்ட 17 ஆண்டு காலம் மத்திய அமைச்சரவையில் அங்கம் வகித்த தி.மு.க., தமிழ் நாட்டிற்கு எதையாவது செய்ததா ? இல்லை. ‘மக்கள் நலம்’ ‘மக்கள் நலம்’ என்று சொல்லி உங்கள் வாக்குகளைப் பெற்றார் திரு. கருணாநிதி. ஆட்சியில் அமர்ந்தவுடன் உங்கள் நலத்தை மறந்துவிட்டார். இப்படிப்பட்ட கட்சிக்கு இந்தத் தேர்தலில் நீங்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும்; நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் திமுக–வுக்கு நீங்கள் சவுக்கடி கொடுத்து விரட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்க வேண்டும் என்றால், தமிழகத்திற்கு தேவையானவற்றை பெற வேண்டும் என்றால், அதற்கு ஒரே வழி மத்தியிலே ஆட்சி மாற்றம். அந்த ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துகின்ற வலிமையை நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வழங்க வேண்டும். எனது கரங்களை வலுப்படுத்த வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களின் ஆதரவோடு உங்கள் ஆட்சி மத்தியிலே அமையப் பெறும் போது,

- இந்திய நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்லும் வகையில் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், இறக்குமதியை தேவைக்கேற்ப செய்யவும்;
- விலைவாசி உயர்வை கட்டுக்குள் கொண்டு வரவும்;
- காவேரி, முல்லைப் பெரியாறு போன்ற நதிநீர்ப் பிரச்சனைகளில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டவும்;
- தமிழக மீனவர்கள் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும்;

- ❖ இலங்கை போரின் போது இனப் படுகொலை செய்தவர்களை ஐக்கிய நாடுகள் சபை மூலம் சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை பெற்றுத் தருவதற்கான தீர்மானத்தை இந்தியாவே முன்மொழியவும்;
- ❖ வல்லரசு நாடுகளுக்கு இணையாக இந்திய ராணுவத்தை, தரைப்படையை, கப்பற் படையை, விமானப் படையை நவீனமயம் ஆக்கவும்;
- ❖ தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கவும், சென்னை உயர் நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழை ஆக்கவும்;
- ❖ சில்லரை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு அறவே ஒழியவும்;
- ❖ வெளிநாடுகளில் உள்ள கருப்புப் பணத்தை மீட்கவும்;
- ❖ 2ஜி ஸ்பெக்ட்ரம் இமாலய ஊழல், ஹெலிகாப்டர் ஊழல், நிலக்கரி ஊழல் என காங்கிரஸ் தலைமையிலான மத்திய கூட்டணி ஆட்சியில், நிகழ்த்தப்பட்ட ஊழல்களுக்கு காரணமானவர்களுக்கு நீதிமன்றம் மூலம் தண்டனை பெற்றுத் தரவும், இந்த ஊழல்கள் மூலம் மத்திய அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்யவும்;
- ❖ பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் விலை நிர்ணயக் கொள்கையை மாற்றவும், பெட்ரோலியப் பொருட்களின் விலை ஓர் ஆண்டு முழுவதும் நிலையாக இருக்கவும்;
- ❖ தனி நபருக்கான வருமான வரி உச்ச வரம்பினை 5 லட்சம் ரூபாயாக உயர்த்தவும், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாடு சுதந்திரம் அடைவதற்கு முன், வெள்ளையர்கள் விரட்டப்பட வேண்டும் என்ற மனநிலை மக்கள் மனங்களில் நிலவியது. தற்போது, இந்தியாவை வேட்டைக் காடாக்கி, கொள்ளையடித்து, சின்னாபின்னமாக்கி, நாட்டையே சூறையாடிய, காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசை தூக்கி எறிய வேண்டும், இனி எதிர்காலத்திலும் மத்தியிலே காங்கிரஸ் ஆட்சியை அமைய விடக் கூடாது என்ற மன நிலையில் தான் நீங்கள் எல்லாம் இருக்கிறீர்கள். இதே நிலை தான் இந்தியா முழுவதிலும் நிலவுகிறது. இந்திய விடுதலைக்கு முன் மக்கள் மனதில் இருந்த அதே மன நிலை இந்தியா சுதந்திரம் அடைந்து 66 ஆண்டுகள் கழித்து, தற்போது மக்கள் மனங்களில் மீண்டும் உருவாகியுள்ளது.

நடைபெற இருக்கின்ற மக்களவைத் தேர்தல், மக்கள் விரோத ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரும் தேர்தல் மட்டுமல்ல, மக்களாட்சியை நிலைநாட்டும் தேர்தல். இந்தத் தேர்தலின் மூலம் இந்திய நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற குடும்ப ஆட்சிக்கு, ஊழல் ஆட்சிக்கு நீங்கள் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும், அதன் மூலம் மக்களாட்சி மலர வேண்டும். இதை உங்களால் தான் சாதிக்க முடியும். செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? **(செய்வோம் என பலத்த கரகோஷம்)**

மத்தியிலே மக்களாட்சி மலர்ந்தால் மட்டும் போதாது. அந்த ஆட்சி தமிழகத்தின் ஆட்சியாக, நமது ஆட்சியாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் ஆட்சியாக அமைய வேண்டும். அப்பொழுது தான், தமிழர்களின் உரிமைகள் நிலைநாட்டப்படும். தமிழர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். தமிழர்களின் நலன்கள் பாதுகாக்கப்படும். தமிழ் நாட்டு மக்களின் வாழ்வு வளம் பெறும். இதன் அடிப்படையில் நீங்கள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு, அனைத்து தொகுதிகளிலும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த வெற்றிச் சின்னமாம் இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து அனைத்து வேட்பாளர்களையும் மகத்தான வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அன்புடன் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளப் பெருமக்களே! இப்பொழுது நான் சொல்வதை நீங்கள் அனைவரும் கவனமாகக் கேட்க வேண்டும்; மனதில் இறுத்திக்கொள்ள வேண்டும் என்று அன்புடன் வேண்டுகிறேன். உங்கள் வாக்கு என்பது உங்கள் உரிமை. உங்கள் வாக்கு என்பது இந்த நாட்டின் சொத்து. உங்கள் வாக்குதான் நாளை இந்தியாவின் தலைவிதியையே மாற்றி அமைக்கப் போகிறது. அத்தகைய சக்தி படைத்தது உங்கள் வாக்கு. அந்த வாக்கை வீணாக்கிவிடாதீர்கள். இந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல கட்சிகள் களம் இறங்கியுள்ளன. அந்தக் கட்சிகளெல்லாம் உங்களிடம் வந்து வாக்கு கேட்கின்றன. வேறு கட்சிக்கு

நீங்கள் வாக்களித்தால் அதனால் யாருக்கும் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை. வேறு கட்சிக்கு நீங்கள் வாக்களித்தால் அந்தக் கட்சியும் வெற்றிபெற முடியாது. வாக்குகள் சிதறிவிடும். அவ்வளவு தான். உங்கள் வாக்கு வீணாகிவிடும். எனவே, அன்பு கூர்ந்து உங்கள் வாக்கை வீணாக்கிவிடாதீர்கள். மாறாக, நீங்கள் அனைவரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை ஆதரித்து, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தந்த வெற்றிச் சின்னமாம் 'இரட்டை இலை' சின்னத்தில் வாக்களித்து மகத்தான வெற்றிபெறச் செய்தால், மத்தியிலே இந்தியாவை வல்லரசாக்கக் கூடிய வலிமையான ஆட்சி அமையும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கம் வகிக்கும் ஆட்சி மத்தியிலே அமைந்தால், இந்த நாட்டு மக்களுக்கும், உங்களுக்கும் எண்ணற்ற நன்மைகள் வந்து குவியும். பாரதம் ஒளிரும். தமிழ் நாடு மிளிரும். எனவே, மறவாமல், தவறாமல் நீங்கள் அனைவரும் வரும் நடைபெறவுள்ள மக்களவை பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 'இரட்டை இலை' சின்னத்தில் வாக்களித்து, அனைத்து வேட்பாளர்களையும் மகத்தான வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை அன்புடன் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற பாதையில் இந்தியாவை வழி நடத்திச் செல்ல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு நல்வாய்ப்பினை நீங்கள் நல்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக உண்டு. செய்வீர்களா ? நீங்கள் செய்வீர்களா ? (செய்வோம் என பலத்த கரகோஷம்)

''வளமான வல்லரசு வலிமையான நல்லரசு'' என்ற நிலையை பாரதம் எய்திட, ''தரணி போற்றும் தன்னிகரில்லா மாநிலம்'' என்ற பெருமையை தமிழகம் அடைந்திட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு 'இரட்டை இலை' சின்னத்தில் வாக்களியுங்கள் என்று மீண்டும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் தாங்களாகவே தங்கள் சொந்தச் செலவில் வாகனங்களில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வரும் செலவு வேட்பாளர் கணக்கில் சேர்க்கப்படும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. எனவே தான், இந்தப் பொதுக் கூட்டத்தில் எனது கட்சியின் வேட்பாளர் கலந்து கொள்ள முடியவில்லை என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

வாக்காளப் பெருமக்களே! மறவாதீர்! உங்கள் சின்னம் இரட்டை இலை. வருகின்ற 24.4.2014 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தலில் நீங்கள் அனைவரும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் MGR தந்த வெற்றிச் சின்னமாம் ''இரட்டை இலை'' சின்னத்தில் வாக்களித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களை 40 தொகுதிகளிலும் அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் உங்களுடனேயே இருப்பார்கள், உங்களையே சுற்றிச் சுற்றி வருவார்கள். உங்கள் தேவைகள் என்ன என்பதைக் கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றித் தரப் பாடுபடுவார்கள் என்ற உத்தரவாதத்தை உங்களுக்கு நான் அளிக்கிறேன்.

வாக்காளப் பெருமக்களே! உங்கள் வாக்கை தமிழ் நாட்டின் நலனுக்காகவும், தமிழர்களின் நலனுக்காகவும் பயன்படுத்துங்கள்; இந்தியத் திருநாட்டை காப்பாற்றுங்கள் என்று உங்களையெல்லாம் அன்புடன் கேட்டுக் கொண்டு ''அச்சம் என்பது மடமையடா அஞ்சாமை திராவிடர் உடமையடா ஆறிலும் சாவு நூறிலும் சாவு தாயகம் காப்பது கடமையடா'' என்ற புரட்சித் தலைவர் MGR-ன் பாடல் வரிகளை நினைவுபடுத்தி, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்." என உரை நிகழ்த்தி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். கண்ட வெற்றிச் சின்னமாம் "இரட்டை இலை" சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்கள். அப்போது, அங்கிருந்த பொதுமக்களும், கழக உடன்பிறப்புகளும், 'புரட்சித் தலைவி அம்மா வாழ்க, எங்கள் வாக்கு இரட்டை இலைக்கே' என்று முழக்கமிட்டு தங்களுடைய ஆனந்தத்தை வெளிப்படுத்தினர்.

நிறைவாக, கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் முன்னிலையில், மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்களைக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர்.

பின்னர், கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் தருமபுரியில் இருந்து புறப்பட்டு சென்னை வந்தடைந்தார்கள்.

கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி நாடாளுமன்றத் தொகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டங்களுக்கு சென்றிருந்த கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்களை வரவேற்கும் விதமாக பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டு, கழகக் கொடித் தோரணங்கள் ஆங்காங்கே அழகுற அமைக்கப்பட்டு, இசைக் கருவிகள் முழங்க, கழக உடன்பிறப்புகள் கழகக் கொடிகளையும், இரட்டை இலை சின்னத்தையும் தங்கள் கைகளில் ஏந்திய வண்ணம் எழுச்சியுடன் வரவேற்றனர்.

கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் **புரட்சித் தலைவி அம்மா** அவர்களுடைய சூறாவளி தேர்தல் பிரச்சார சுற்றுப் பயணத்தின் 25–ஆம் நாளான இன்று, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி நாடாளுமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த மக்கள், கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கடல் அலை போல் லட்சக்கணக்கில் திரண்டிருந்து பேராதரவு அளித்ததைப் பார்க்கும் போது, கழக வேட்பாளர்களின் வெற்றி உறுதியாகிவிட்ட ஒன்று என்பதை கண்கூடாக உணர முடிந்தது.

## கழகப் பொதுச் செயலாளர், தமிழ் நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஒப்புதலோடு இந்தச் செய்தி வெளியிடப்படுகிறது.

**தலைமைக் கழகம்,**
**அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம்.**